வாக்குமூலம்
குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்
வழக்கு எண் MCOP. No. 22/2025
வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. முனியசாமி | தொழில் | :: டிரைவர் |
| த/க பெயர் | :: கருப்பையா | வயது | :: 45/2026 |
| கிராமம் | :: சின்ன செம்பை | | |
| தாலுகா | :: இராமநாதபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 03.03.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.10 மணி)

நான் மனுதாரர் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை ஆன்லைன் நகல் ம.சா.ஆ.1. மதுரை தேவதாஸ் மருத்துவமனை Discharge summary அசல் ம.சா.ஆ.2. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.3. நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில் ம.சா.ஆ.4. நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.5 வரிசை (25 எண்ணிக்கை). என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.6. என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ 7 (ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.) என்னுடைய புறநோயாளி மருந்து சீட்டுகள் ம.சா.ஆ.8 வரிசை (4 எண்ணிக்கை). மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

இராமநாதபுரம் – தேவிப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் மீன் மார்க்கெட் அருகில் வைத்து விபத்து நடந்தது. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்தேன் என்று

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:11:21 +0530

மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தேன், அதில் சாலையின் வலதுபுறம் மீன் மார்க்கெட் உள்ளது என்றால் சரிதான். நான் சாலையின் இடதுபுறமாக நின்றதாக மனுவில் சொல்லியுள்ளேன். நான் அந்த இடத்திற்கு மீன் வாங்குவதற்காக சென்றேன். நான் மீன் வாங்கும் அவசரத்தில் சாலை விதிகளை கடைபிடிக்காமல் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அதனை கவனமாகவும், மெதுவாகவும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. மீன் மார்க்கெட் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும்போது வளைவான பகுதி உள்ளதால் அந்த இடத்தில் மெதுவாகத்தான் வரமுடியும் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் விபத்து சமயம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் எனக்கு இழப்பீடு ஏதேனும் கிடைக்கதக்கது என்றால் அதனை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.03 17:11:26 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.